# தமிழ் மஞ்சரி

(2024-2025ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

## முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

முனைவர் த.கீதாஞ்சலி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி - 642 001

Language: Tamil

**Thamizh Manjari**

**First Year - Semester - II**

Author: **Dr. T. Geethanjali**

**Assistant Professor, Tamil Department**

**Nallamuthu Gounder Mahalingam College, (Autonomous)**

**Pollachi - 642 001**

First Edition : December, 2024

Copyright : Publisher

No.of Pages : 136

Publisher:

**New Century Book House Pvt. Ltd.,**

41-B, SIDCO Industrial Estate,

Ambattur, Chennai - 600 050.

Tamilnadu State, India.

Email: info@ncbh.in

Online: www.ncbhpublisher.in

ISBN: 978 - 81 - 2344 - 769 - 8

Code No. A 5268

**₹ 170/-**

**Branches**

**Ambattur** 044- 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Thanjavur** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

**தமிழ் மஞ்சரி**

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

ஆசிரியர்: முனைவர் த. கீதாஞ்சலி

உதவிப் பேராசிரியர்,

தமிழ்த்துறை

நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642 001

முதல் பதிப்பு : டிசம்பர், 2024

அச்சிட்டோர்: பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,

16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14

☎ : 044 - 28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

# பொருளடக்கம்

## I. செய்யுள் பகுதி


1. கலிங்கத்துப்பரணி - இராச பாரம்பரியம்
   - ஜெயங்கொண்டார் 11
2. அழகர் கிள்ளைவிடு தூது
   - பலபட்டடை சொக்கநாதபிள்ளை 16
3. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்
   - குமரகுருபரர் 19
4. அபிராமி அந்தாதி
   - அபிராமி பட்டர் 22
5. தேவாரம் - ஆறாம் திருமுறை - திருமறைக்காடு
   - திருநாவுக்கரசர் 24
6. நாலாயிர திவ்யப் பிரபந்தம் - முதல் திருமொழி
   - பெரியாழ்வார் 27
7. தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி 29
8. நந்திக் கலம்பம் 32


## II. உரைநடை


1. தீயினை நயந்தான் - அ.ச.ஞானசம்பந்தன் 35
2. புறநானூற்றில் பொதுவியல் திணை - முனைவர் அ.மகபூபூ 42
3. பதினெண்கீழ்க்கணக்கு காட்டும் அறிவியல் - முனைவர் ம.சித்ரகலா 50
4. ஆய்வு நோக்கில் சூளாமணி - முனைவர் க.தனலட்சுமி 56
5. 'எழுத்து' புதுக்கவிதையின் வெற்றிக்கொடி - சிற்பி பாலசுப்பிரமணியம் 60
6. தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு விழாக்கள் - முனைவர் ந.ஜெயசுதா 68
7. தமிழில் கல்வெட்டியல் - முனைவர் ந.பிரகாஷ் 73
8. வைணவச் சிந்தனைகளில் திருமங்கையாழ்வார் - பேரா.ரா.சூர்யா 79


## III. இலக்கணம்

சொற்றொடர்


1. தொகை நிலைத்தொடர் 86
2. தொகா நிலைத் தொடர் 90

# 6. தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு விழாக்கள்

- முனைவர் ந.ஜெயசுதா

‘விழா என்னும் திறந்த வாசல் வழியே தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்’ - தாகூர். இக்கூற்று, மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதும், அச்சமுதாய மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும். இத்திருவிழாவில் மக்களின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

பறவையும் எறும்பும் இடமாற்றம் செய்து கொண்டு வாழ்கின்றன. மனிதனுக்கு இடமாற்றம் மட்டுமல்ல, மனமாற்றமும் தேவைப்படுகின்றது. அதனால் பண்டைய முன்னோர்கள் பாரம்பரியமாகப் பின்பற்றிய விழாக்களை நாம் கடைபிடித்து தவறாமல் கொண்டாடி மகிழவேண்டும். தமிழர்களின் வழிபாட்டில் உள்ள விழாக்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**வழிபாடு:**

வழிபாடு என்னும் சொல்லுக்குத் தொல்காப்பியர் ‘வழிபடுதெய்வம்’ என்று கூறுகின்றார். வழிபாடு என்னும் சொல் ‘வழிபடு’ என்னும் வேர்ச்சொல்லில் இருந்து பிறந்ததாகும். இதன் பொருளாக, அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டுதல் என தொகையகராதியும், வணக்கம், வழியிற்செல்லுகை, பின்பற்றுகை, பூசனை, வழக்கம், சமயக் கோட்பாடு என்னும் பல பொருள்களைத் தமிழ் அகராதியும் பொருள் தருகின்றது.

இப்பொருள்கள் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு வழிபட்டு வந்த விதங்களையும், பின்பற்றக்கூடியவற்றையும் சுட்டுகின்றது. வழிபாடுகளின் வழி மக்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு மகிழ்ச்சியில் திருவிழாவாகக் கொண்டாட ஆரம்பித்துள்ளனர் எனலாம்.

இவ்வழிபாடு ஆரம்பகாலத்தில் இயற்கையின் மீது கொண்ட பய உணர்வால் இயற்கை வழிபாட்டைப் பின்பற்றி வாழ்ந்தனர். அதன் பின்னர் சங்க மக்கள் ஐந்து நில அமைப்பில் நில தெய்வங்களை வழிபட ஆரம்பித்து அதன் வளர்ச்சி நிலையாக சிறுதெய்வம், பெருதெய்வம், மதவழிபாடு என்றெல்லாம் வழிபாடுகளைப் பின்பற்றி வழிபட்டு வருகின்றோம்.

**இயற்கை வழிபாடு**

ஆதிகாலம் தொட்டு இக்காலம் வரை மனிதன் வழிபாட்டோடு தான் வாழ்ந்து வருகின்றனர். இரவிலிருந்து எல்லா உயிர்களின் கண்களுக்கும் ஒளியைக் கொடுக்கும் சூரியன் முதற்கொண்டு, உலக உயிர்களின் உருத்தோற்றத்திற்குத் தேவையானவற்றை வழங்கும் இயற்கை அனைத்தையும் வழிபாடு செய்கின்றோம். ஆதிமனிதன் இயற்கையைச் சார்ந்தே வாழ்ந்தான். காட்டுத் தீ, பெருமழை,

பெரு வெள்ளம், பூமி அதிர்ச்சி, வறட்சி இவ்வாறான இயற்கைப் பேரழிவுகளால் துன்பப்பட்ட மக்கள் தன் அறிவுக்கும் மேற்பட்ட ஆற்றல் இயற்கையிடம் உண்டு என்பதை உணர்ந்தனர். அன்றிலிருந்து இயற்கையை வழிபட ஆரம்பித்தனர். உண்மையைச் சொல்லப் போனால் இயற்கைதான் இறைவன். மாணிக்கவாசகர் இறைவன் யார் என்பதற்கு இயற்கைதான் இறைவன் என்கிறார்,

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே"

(திருவாசகம்)

இப்பாடல் வழி சுருக்கமாகச் சொல்கின்றார். ஐம்பூதங்களாக இருப்பவையே இறைவன்.

வள்ளுவப் பெருந்தகையார்,

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்"

(திருக்குறள் - 637)

இக்குறள், செயற்கையாய் எத்தகைய நூல் அறிவின் ஆற்றல் பெற்றிருந்தாலும் - உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்தி அச்செயல்களைச் செய்யவேண்டும் என்கிறார், எத்தகைய ஆற்றல் இருந்தாலும் இயற்கையின் தன்மைக்குத் தகுந்தாற்போல அறிவாற்றலை இயற்கையைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டனர் எனலாம்.

**சங்க வழிபாடு:**

சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கை முறைகள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகைநிலப் பிரிவுகள் இருந்தன. குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த பகுதியாகும். முல்லை - காடும் காடு சார்ந்த பகுதியாகும். மருதம் - வயலும் வயல் சார்ந்த பகுதியாகும். நெய்தல் - கடலும் கடல்சார்ந்த பகுதியாகும். பாலை - மணலும் மணல் சார்ந்த பகுதியாகும். அந்தந்த நிலத்து மக்கள் அவரவருக்குரிய தெய்வங்களை வழிபாடு செய்து வந்தனர் என்பதனை, பண்டைத்தமிழ் இலக்கியங்களின் வாயிலாகவும், அவற்றிற்கு இலக்கணமாக விளங்கும் தொல்காப்பியம் வாயிலாகவும் அறியமுடிகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணலுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

(தொல்காப்பியம்)

இப்பாடலின் முறையே திருமால், முருகன், இந்திரன், வருணன் ஆகியோர்களை வழிபட்டுள்ளனர். இதில் பாலைநிலத் தெய்வத்தைத் தொல்காப்பியர் குறிப்பிட வில்லை. ஆனால் சங்கப் பாடல்களில் 'கொற்றவை' பாலை நிலத் தெய்வமாகக் குறிப்பிடுகின்றதைக் கொண்டும் ஐந்து நிலத் தெய்வ வழிபாட்டை சங்க மக்கள் மேற்கொண்டுள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

**விழாக்கள்:**

கோயில் என்றால் திருவிழா, திருவிழா என்றால் கோயில் விழாக்கள் என்று தான் நினைவுவரும், மக்களின் துன்பத்தை மறக்கச் செய்து இன்பத்துடன் உற்றார் உறவினருடன் ஒன்றுகூடி மகிழ்ச்சியோடு வாழ வைப்பது திருவிழாக்களாகும். இவ்விழாக்கள் மனித மனங்களுக்குப் புத்துணர்ச்சியைத் தருவதோடு சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றன.

ஒவ்வொரு சமுதாயத்தின் பண்பாட்டையும் மக்கள் கொண்டாடும் விழாக்கள் மூலம் அறிந்து கொள்ளமுடியும்.

மனிதர்களுக்கான கொண்டாட்டமும், அதனால் மனமகிழ்ச்சியும், சொந்தங் களுடன் சேர்ந்து பொழுதுபோக்குதலுமே விழாக்களின் நோக்கமாகிறது. பண்டைக் காலத்தில் விழாக்கள் நிகழ்ந்ததை,

**'மடியா விழாவின் யாணர் நன்னாடு'** **(புறநானூறு)**

என்ற அடி ஆண்டுதோறும் விழாக்கள் நடந்துள்ளதை தெரியப்படுத்துகின்றது.

பொதுவாக தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களே விழா எடுக்க சிறந்த மாதங்கள் எனக் கருதி விழாக்கள் இன்றளவும் கொண்டாடப்படுகின்றது. அவற்றுள் சில விழாக்களைக் காணலாம்.

**சித்திரை விழாக்கள்**

சித்திரை முதல் நாள் தமிழ் வருடப் பிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. புத்தாடை அணிந்து வருடப்பிறப்பைக் கொண்டாடுகின்றனர். முதல் நாள் மகிழ்ச்சியாக இருந்தால் வருடம் முழுவதும் மகிழ்ச்சி அமையும் என்ற நம்பிக்கை மக்களிடையே உண்டு.

தமிழகம் முழுவதும் சித்திரை மாதத்தில் ஏராளமான கோயில்களில் திருவிழா நடைபெறும். சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமி நாள் சித்ரா பௌர்ணமி' என்று அழைக்கப்படும்.

பூலோகத்தில் மனிதர்கள் செய்யும் பாவ, புண்ணியக் கணக்குகளை எமலோகத்தில் பதிவு செய்து வைக்கும் சித்திரகுப்த நாயனாருக்குச் சித்ரா பௌர்ணமியன்று விழா கொண்டாடுகிறார்களாம்.

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் சித்திரைப் பெருவிழா ஏப்ரல் மாதம் கொடியேற்றத்துடன் துவங்கி 13 நாட்கள் வெகு விமர்சையாக நடைபெற்று வருகின்றது.

**ஆடிப் பெருக்கு விழா:**

ஆடி மாதம் 18 ஆம் நாள் தமிழக ஆறுகள் பெருக்கெடுத்து ஓடுவதைக் குறிக்கும் ஒரு பண்டிகை ஆகும். ஆடிப்பெருக்கினைப் பதினெட்டாம் பெருக்கு என்றும், ஆடிப்பதினெட்டு என்றும், கொங்கு வழக்கில் ஆடிநோம்பி என்றும் அழைக்கப்படுகிறது.

தென் மேற்குப் பருவ மழையால் ஆறுகளில் புதுப்புனல் பொங்கிவரும். இதனையே ஆடிப்பெருக்கு எனக் கூறுவர். இந்நாளில் உழவர்கள் மகிழ்ச்சியோடு

நம்பிக்கையுடன், 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்ற முதுமொழிக்கு இணங்க விதை விதைத்து அறுவடைக்குத் தயாராகின்றனர்.

'நீர் இன்றிஅமையாது உலகு என்பதை உணர்ந்த நம் முன்னோர்கள் அதைப் போற்றுவதற்காகவும் நன்றிக் கடன் செலுத்தவும் காலம் காலமாக இவ்விழாவை கொண்டாடி வருகின்றனர். சிலப்பதிகாரத்தில் புதுப்புனல், புதுநீர் என்ற பெயரிலேயே ஆடிப்பெருக்கைப் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

சோழப் பேரரசை ஆட்சி செய்த மாமன்னன் ராஜராஜசோழன் ஆட்சிக் காலத்தில் ஆடிப்பெருக்குக் கொண்டாட்டம் பற்றிய செய்தியினைப் பொன்னியின் செல்வன் நாவலின் ஆசிரியர் கல்கி பதிவு செய்துள்ளார். கரிகாற்சோழனின் நண்பர் வந்தியத் தேவன் வரும்போது வீராணம் ஏரிக்கரையில் ஆடிப்பெருக்குக் கொண்டாட்டம் நடந்துள்ளது. "ஆடிப் பதினெட்டாம் பெருக்கன்று சோழநாட்டு நதிகளிலெல்லாம், வெள்ளம் இருகரையையும் தொட்டுக் கொண்டு ஓடுவது வழக்கம், அந்த நதிகளிலிருந்து தண்ணீர் பெறும் ஏரிகளும் பூரணமாக நிரம்பிக் கரையின் உச்சியைத் தொட்டுக்கொண்டு அலைமோதிக் கொண்டிருப்பது வழக்கம். அன்று பதினெட்டாம் பெருக்குத் திருநாள் அல்லவா? பக்கத்துக் கிராமங்களிலிருந்து, தந்த நிறத் தென்னங்குருத்துகளால் சப்பரங்கள் கட்டி இழுத்துக்கொண்டு கும்பல் கும்பலாக மக்கள் அங்கே வந்து கொண்டிருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சில வயோதிகர்களும் கூடப் புதிய ஆடைகள் அணிந்து விதவிதமான அலங்காரங்கள் செய்து கொண்டு வந்திருந்தார்கள். பெண்களின் கூந்தல்களைத் தாழம்பூ, செவ்வந்திப்பூ, மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம் முதலிய மலர்கள் அலங்கரித்தன. கூட்டாஞ்சோறும், சித்திரான்னமும் எடுத்துக் கொண்டு பலர் குடும்பம் குடும்பமாக வந்திருந்தார்கள். ஆடவர்களில் சில வம்புக்காரர்கள், பெண்கள் சூடியுள்ள மலர்களை அவர்கள் அறியாமல் எடுத்து கண்வாய் ஓரத்தில் விட்டு ஏரிக்கரைக்கு மறு பக்கத்தில் அவை ஓடி வருவதைக் கண்டு மகிழ்ந்தார்கள். அங்கு நின்ற பெண்களில் இனிய குரலையுடைய சிலர் பாடுவதையும் காது கொடுத்து கேட்டான் வந்தியத்தேவன். அவர்கள் ஓடப்பாட்டும், வெள்ளப்பாட்டும், கும்மியும், சிந்தும் பாடினார்கள். இவற்றையெல்லாம். பார்த்துக்கொண்டு சிறிதுநேரம் வல்லவரையன் வந்தியத்தேவன் அங்கேயே நின்று கொண்டிருந்தான்." என ஆடிப்பெருக்குக் கொண்டாட்டத்தை விவரிக்கிறார் கல்கி.

ஆடிப்பெருக்கில் இருந்துதான் விவசாயம் தொடங்குகிறது. நீரைப்போற்றுதலும் நீரை வணங்குதலும் நம்முடைய உழவர் பெருமக்களின் நீண்ட நெடுங்கால வழக்கமாக இருந்து வருகிறது. மேலும், ஆடி அமாவாசையன்று இந்துக்களின் நம்பிக்கையாக முன்னோர்களுக்கு நீர் நிலைகளில் தர்ப்பணம் கொடுக்கின்றனர். அவர்களை நினைவு கூறும் வகையில் உணவு சமைத்து வழிபாடு செய்து காகனுக்கும் படைக்கின்றனர்.

**பொங்கல் விழா**

தமிழ் மக்கள் அனைவராலும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படும் விழா. சூரியனுக்கும் மழைக்கும் மாடுகளுக்கும் நன்றி செய்யும் விழாவாக இப்பொங்கல் திருநாளை மக்கள் கொண்டாடுகின்றனர். மார்கழி மாதத்தின் இறுதிநாளைப்

'போகி' விழாவாகக் கொண்டாடுகின்றனர். இந்திரனுக்குப் 'போகி' என்ற பெயர் உண்டு. பழைய பொருட்களைப் போக்கிப் புதிய பொருட்களால் வீட்டை அலங்காரம் செய்வர்.

பொங்கல் விழா தைத்திங்கள் முதல் நாள் கொண்டாடப்படுகின்றது. தமிழர் திருநாள் என்றும் உழவர் திருநாள் என்றும் அழைக்கின்றனர். இது உழவர் பெருமக்களுக்குப் பொன்னான நாள். உழைப்பின் உயர்வினை உலகுக்கு உணர்த்தும் உன்னதத் திருநாள். தமிழர் கண்ட பொங்கல் விழா தரணிக்கோர் புதுவிழா. வேளாண்மையின் பெருக்கத்திற்குக் காரணமான சூரியனை வணங்குகின்றனர். புதுப்பானையில் பொங்கலிட்டுப் 'பொங்கலோ பொங்கல்' என முழங்குவர். கதிரவனுக்குப் பொங்கலைப் படைத்து உண்டு மகிழ்வர்.

தைத்திங்கள் இரண்டாம் நாள் மாட்டுப் பொங்கலாகும். மாடுகளைக் குளிப்பாட்டி, கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, குங்குமம் இட்டு மாலை சூட்டிச் சோறு படைப்பர். சில இடங்களில் அன்று சல்லிக்கட்டு நடைபெறுவதும் உண்டு. தமிழக அரசு இந்நாளைத் 'திருவள்ளுவர் தினமாக'க் கொண்டாடி வருகின்றது.

மாட்டுப் பொங்கலுக்கு மறுநாளை 'காணும் பொங்கல்' என அழைக்கின்றனர். பெரியவர்களைக் கண்டு கால்களில் விழுந்து வாழ்த்துப் பெறுவர், காணும் பொங்கல் என்றும், கன்னிப்பொங்கல் என்றும் அழைக்கின்றனர்.

வீடெல்லாம் தூய்மையும், ஊரும், நாடும், உழவர் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியும் கொண்ட சிறப்பான விழா பொங்கல் விழா ஆகும்.

தமிழர்களின் விழாக்களில் ஒரு சில விழாக்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளது. இன்னும், ஆண்டுவிழாக்கள், மாதவிழாக்கள், நாள்விழா, மதவிழாக்கள், பொது விழாக்கள் என்ற முறையே தமிழர்களின் வாழ்க்கையே விழாக்கோலமாகத் தான் அமைகின்றது.

உலகில் வாழுகின்ற மக்கள் அனைவரும் என்றென்றும் மகிழ்ச்சியோடு வாழவேண்டும் என்றுதான் எண்ணுகின்றனர். எண்ணம் போல் வாழ்வது வாழ்க்கை என்பார்கள்.

எண்ணுவது போல எல்லோர்க்கும் நடப்பது கிடையாது. வாழ்வின் சில நாளாவது இன்பமாக வாழ வேண்டும் என்ற ஆசை எல்லோர் மனதிலும் உண்டு. இன்றைய இயந்திர உலகில் உழைத்துக் கொண்டே இருக்கின்றோம். அந்த உழைப்பினால் ஏற்படும் களைப்பைப் போக்கிக் கொள்ளவும், இன்பமாக வாழவும் இவ்விழாக்கள் உதவுகின்றன.

# தமிழ் மஞ்சரி

(2024-2025ஆம் கல்வியாண்டில் சேர்வோர்க்குரியது)

முதலாமாண்டு - இரண்டாம் பருவம்

Scan Me

ISBN 978-81-2344-769-8

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410
www.ncbhpublisher.in | email: info@ncbh.in

9788123447698

Code No. A 5268 ₹ 170/-